நல்லுரை

வெண்பா

ரெ. முத்துக்கணேசன்



நல்லுரை
வெண்பா

ஆசிரியர்

ரெ. முத்துக்கணேசன்

விற்பனை உரிமை :

நவயுகப் புத்தகாலயம்

கல்லுக்கட்டி :: காரைக்குடி.

முதற் பதிப்பு : நவம்பர் 1953

விலை ரூபாய் ஒன்று

இந் நூலாசிரியர்
எழுதிய
‘வாழ்க உலகம்’
(கட்டுரைகள்)
விலை அணா எட்டு.

முன்னுரை

நூலின் பெயர் 'நல்லுரை வெண்பா' என்பது. கடவுள் வாழ்த்து உள்பட முப்பது நேரிசை வெண் பாக்களால் ஆகியது இந் நூல். எளிய – இனிய – சொற்களால் யாக்கப் பெற்றுள்ளது. மாணவர்தம் பருவத்திற் கேற்ப, வாழ்வின் அற உண்மைகளைத் தொகுத்துக் கூறுவதே இந் நூலின் குறிக்கோள். முன்னோர் வழிநிற்கும் இந் நூலைத் தமிழகம் ஆதரிப்பதாக!

ஆசிரியன்.

உள்ளுறை

			பக்க எண்
க.	கடவுள் வாழ்த்து	...	9
உ.	நல்லன கொள்ளல்	...	10
ங.	நல்லோர் மனம்	...	11
ச.	நன்றறிந்த மாண்பு	...	12
ரு.	ஒழுக்கப் பண்பு	...	13
சா.	இல்லற இயல்	...	14
எ.	பெண்மை	...	15
அ.	அன்புடைமை	...	16
கூ.	தாயன்பு	...	17
கO.	பயன் கருதாமை	...	18
கக.	உண்ணல் முறை	...	19
கஉ.	நல்வழிச் செல்வம்	...	20
கங.	உற்றுழி உதவி	...	21
கச.	புகழ் வாழ்வு	...	22
கரு.	கூடா நட்பு	...	23
கசா.	வித்தக நட்பு	...	24
கஎ.	பொருளுறவு	...	25

கஅ.	தாழாமை	...	26
ககூ.	மடியின்மை	...	27
உO.	சினவாமை	...	28
உக.	பொறுமை	...	29
உஉ.	பேராசையின்மை	...	30
உங.	உழைப்பு	...	31
உச.	இன்பவீடு	...	32
உரு.	சான்றோர் தவம்	...	33
உசா.	ஒருமைப்பாடு	...	34
உஎ.	உள்ளத் துறவு	...	35
உஅ.	விதிவழி	...	36
உகூ.	இறையுணர்வு	...	37
ஙO.	திருக்குறள்	...	38

க

கடவுள் வாழ்த்து

○

மூவா முதலாய்
முழங்கு தமிழ்வேதப்
பாவா யிலங்கு
பரம்பொருளை - நாவால்
துதித்திடுவோம் நாடித்
தொழுதிடுவோம் என்றும்
பதித்திடுவோம் நெஞ்சில்
பணிந்து !

உ

நல்லன கொள்ளல்

ㅇ

செத்தை யகற்றியே
செம்மண்ணில் தன்வயிற்றை
மெத்துதலாய் வைத்துறங்கும்
மென்முயல்போல்-இத்தரையில்
கண்ட குறையைக்
களைந்தொதுக்கி நல்லவற்றைக்
கொண்டு மகிழ்தல்
குணம்!

ரு

நல்லோர் மனம்

O

கழிவுநிலை நீரதனில்
கங்கை கலக்க

இழிவுநிலை நீங்கு
மியல்போல்-வழிநிலையில்

தூற்றுவார் புன்மொழியைத்
தூயநிறை பண்பாலே

மாற்றுமே நல்லோர்
மனம்!

சு

நன்றறிந்த மாண்பு

○

புதுமலரை நாடிப்
புலனூரத் துய்க்கும்
மதுகரம்போல் நன்றறிந்த
மாண்பால்-இதுவுலகில்
தீதிலா நல்லறத்தைத்
தேடி யதன்வழியே
கோதின்றி வாழ்தல்
குணம்!

௫

ஒழுக்கப் பண்பு

○

மக்கள் மதிப்பும்
மறையோடு செல்வமும்

ஒக்கவாய்த் தாலும்
ஒளிராவாம்-தக்க

ஒழுக்கமெனும் பண்பில்
உருவாகும் கண்டீர் !

வழுக்கிலா வாழ்வின்
வழி !

2577

சூ

இல்லற இயல்

○

வருவாரைப் போற்றியே
வாழ்மக்கள் பெற்றுத்

தருவாய்க் கொடிசுற்றத்
தானே-உருவான

பல்லறமுங் காத்துப்
பயன்கருதா வாழ்முறைதான்

இல்லறத்தார்க் கேற்ற
இயல் !

எ

பெண்மை

○

உண்ட உணவால்
உயிர்வாழக் கண்டதுபோல்

கொண்ட கணவன்
குணமறிந்தே-அண்டமதில்

உண்மைப் பணியால்
உளங்கலந்து பேணிடுவாள்

பெண்மை நலங்கனிந்த
பெண் !

அ

அன்புடைமை

o

அறம்பயக்கும் பண்படா
    ஐம்புலனைக் காக்கும்

திறம்பயந்து நாளும்
    தெளிக்கும்-மறம்பயக்கும்

கொண்டாரைப் போற்றும்
    குலமுயர்த்தும் அன்புபோல்

உண்டோ உலகில்
    உரை !

௧௦

தாயன்பு

○

மக்கள் சமுதாயம்
மாநிலத்தி லுய்வதற்குத்
தக்க வழிகேளாய் !
தாயைப்போல்-எக்காலும்
ஏதமிலா அன்பை
இதயத்தில் கொண்டுநிதம்
வாதனைகள் ஏதுமின்றி
வாழ் !

க0

பயன் கருதாமை

○

பெற்றவளின் உள்ளம்
பெறுபயனை நாடாமல்

உற்றளவு செய்யும்
உறுதுணைபோல்-கற்றவர்கள்

பற்றற்ற நற்செயலால்
பல்லோர்க் குதவியிங்கு

அற்றம் களைதல்
அறம்!

கக

உண்ணல் முறை

○

விண்ணோக்கி வாழ்மலரும்
வேணளவு தன்னுணவை

மண்ணில் அடையும்
மதியேபோல் - எண்ணின்

உடலின் நிலையறிந்து
உண்ணுதலே மாந்தர்

கடனும் நலமுமெனக்
காண் !

கஉ

நல்வழிச் செல்வம்

○

எவ்வித் திரியும்
இளங்குருவி அத்தனையும்
வவ்வாது தன்குலத்தின்
வாயுணவை - இவ்வுலகில்
நல்வழியிற் செல்வ
நலந்துய்ப்போர் நன்மக்கள்
அல்வழியிற் செல்லார்
அறி !

கரு

உற்றுழி உதவி

○

விண்குளிரத் தோன்றி
விரிமலரை முத்தமிட்டு

மண்குளிரப் பெய்யும்
மழையேபோல் - பண்குளிறும்

நற்றமிழ்ப் பாவின்
நயமுணர்ந்தா ருள்ளம்போல்

உற்ற நிலைகண்
டுதவு !

கசு

புகழ் வாழ்வு

○

எங்கு பிறந்தாலும்
எம்மலரும் வீழுமுன்
தங்கு மணப்புகழைத்
தானிறுவும் - அங்கதுபோல்
மன்னுலக வாழ்வு
மறையாமுன் மாற்றுயரும்
பொன்னெனவே வாழ்க்கை
புரி !

கரு

கூடா நட்பு

○

நின்றுவக்கும் சொல்லால்
　　நிறைநடிப்பால் தன்னலத்தால்
வென்றுவக்கும் நட்பை
　　விழைந்தக்கால்-கொன்றுவக்கும்
வேடரின் கைப்புகுந்த
　　வெங்கணைபோ லாகுமே
கூடத் தகுதியிலார்
　　கூட்டு!

கசு

வித்தக நட்பு

○

வித்துமுதல் அத்தனையும்
வேற்று மரவேரின்

சத்துணவைத் தானுறிஞ்சும்
சந்தனம்போல்-இத்தரையில்

ஒத்து மிகவாழ்ந்
துறவாடித் தான்கெடுக்கும்

வித்தகமாம் நட்பை
விலக்கு !

கஎ

பொருளுறவு

○

வருசுற்றம் சூழுறவாய்
வாழ்வா ரிடத்துப்

பொருளுறவு கொண்டக்கால்
பூவில்-அருள்அழியும்

அன்பழியும் ஆதரவாம்
அத்தனையும் போயழிய

வன்பழியே நிற்கும்
வளர்ந்து !

கஅ

தாழாமை

○

கோழுணவைத் தன்வலியால்
　　கொன்றுடனே தின்பதலால்

கீழுணவைத் தீண்டாத
　　கேசரிபோல் - வாழுலகில்

பாழ்வறுமைக் காலமே
　　பாம்பியல்பில் சீறிடினும்

தாழ்வுநிலை ஏற்றல்
　　தவறு !

கசு

மடியின்மை

○

தேய்த்துப் பொருள்போக்கும்
    தேர்ந்த நிலைமாய்க்கும்
ஏய்த்துப் பொருள்தேட
    எண்ணமுறும்-வாய்த்தபேர்
ஆக்கத்தைக் கொன்றே
    அழிவைத் தருமடியை
ஊக்கத்தால் நீக்கல்
    உயர்வு !

உ0

சினவாமை

○

சிந்தை கெடுக்கும்உன்
சீர்வாழ்வைப் பாழ்படுத்தும்
முந்தை நலத்தின்
முகமழிக்கும் - தந்தை
உறவறுத்துத் தாயை
யொதுக்குமே அந்தோ
அறவே சினத்தை
அடக்கு !

உக

பொறுமை

○

பல்கருவி கொண்டு
பலகாலம் கல்பிளந்தும்
மல்பொருளை நல்கும்
மலையேபோல் - கல்லார்
வசைமொழிகள் பேசிடினும்
வாழ்வுநிலை யோங்க
நசைபொறுத்து நிற்றல்
நலம்!

உஉ

பேராசையின்மை

○

கொண்ட மணவாழ்வின்
    கூட்டழிக்கும் மற்றவர்பால்
கண்டபொருள் தானடையக்
    கால்கொள்ளும் - அண்டமதில்
பேராசை யென்னும்
    பெரும்பேயை நம்வாழ்வில்
வாராது காத்தல்
    வழி!

உ௫

உழைப்பு

○

கூடுகட்டி நின்று
குலமாய்த் திரிந்துநிதம்

பாடுபடும் தேனீப்
பறல்போல - நாடுதனில்

வற்ரு உழைப்போடு
வாழத் தொடங்குவதே

கற்ருர்தம் வாழ்வின்
கடன் !

உசு

இன்ப வீடு

o

வினைசெய்து நாளும்
விருந்தளித்துக் காக்கும்

மனைவாழ்வாம் இவ்வுலக
மாண்பை - நினையுங்கால்

அன்பிறைவன் தங்குதற்கு
ஆலயமா நின்றிலங்கும்

இன்பநிறை வீடென்
றியம்பு !

உரு

சான்றோர் தவம்

○

இன்றுவரும் துன்பத்தை
எண்ணிக் குலையாது
நின்றுபுகழ் சூட
நினைந்துழைக்கும் -.என்றும்
நலம்பயக்கும் தொண்டொன்றால்
நானிலத்தைக் காக்கும்
தலம்பயந்த சான்றோர்
தவம் !

உ௬

ஒருமைப்பாடு

○

வண்ணநிறங் கண்டும்
வழிவிலகாத் தேன்வண்டு
திண்ணமுடன் தேனைத்
திரட்டுதுபார் - எண்ணமெலாம்
எத்தொழிலைச் செய்யுங்கால்
ஏதுநிலை வந்தாலும்
அத்தொழிலைக் காத்தல்
அழகு !

உஎ

உள்ளத்துறவு

○

உறவு நிலையற்ற
உள்ளத் துறவே

துறவு நிலையென்பர்
தூயோர் - புறவுலகில்

மற்றத் துறவு
மறைந்தொழுகும் மாந்தர்க்கே

உற்ற துறவென்
ருேழி !

உஅ

விதிவழி

○

தந்திரத்தைக் கொண்டாலும்
        தத்துவத்தைக் கற்றாலும்
எந்தவழி சென்றாலும்
        ஏய்த்துவிடும் - அந்தவிதி
வாழ்ந்தாலும் தீமைசெயும்
        வாழவழி காட்டுமிங்கு
தாழ்ந்தா லுயர்த்துமே
        தான் !

உசு

இறையுணர்வு

○

முத்தமிட்டுக் கூடி
முகங்களித்த நாளெல்லாம்
இத்தரையில் ஏகிவிடும்
என்றெண்ணு - பித்தனவன்
தந்திட்ட பேரறிவால்
தாயான தத்துவனைச்
சிந்தனையில் வைத்தல்
சிறப்பு !

௩0

திருக்குறள்

○

காதற் களிப்பூட்டும்
      கற்க அறமுணர்த்தும்

போதப் பொருளுரைக்கும்
      பொய்யாத - வேதமெனும்

நீதித் திருக்குறளை
      நெஞ்சாரத் தம்வாழ்வில்

ஓதித் தொழுதொழுக
      ஓர்ந்து !

உரைக் குறிப்பு

க.	மூவா முதல்	- முழுமுதற் பொருள்
உ.	மெத்துதலாய்	- அப்புதலாய் ; மெதுவான தன்மை பொருந்தும்படியாய்
ச.	மதுகரம்	- தேன்வண்டு
	கோதின்றி	- குற்றமின்றி
எ.	அண்டம்	- உலகம்
அ.	மறம்	- வீரம்
கூ.	ஏதமிலா	- கேடில்லாத ; குற்றமில்லாத
க0.	அற்றம்	- துன்பம்
கங.	பண்குளிறும்	- இசை ஒலிக்கும்
கரு.	வெங்கணை	- கொடிய அம்பு
கசு.	வித்தகம்	- அதிசயம்
கஅ.	கேசரி	- சிங்கம்
உக.	மல்பொருள்	- வளமான பொருள்
	நசை பொறுத்து	- அன்பால் பொறுத்து
உஉ.	கால்கொள்ளும்	- தொடங்கும்
உங.	பறல்	- பறவை ; புள் ; வண்டு

கலைமகள் பிரஸ், காரைக்குடி. போன்: 12